12.02.2026.

Crl.M.P.No.567/2025

**காமாட்சி க/பெ.சுள்ளி (புகார்தாரர்) என்பவரது வாக்குமூலம்.**

நான் வந்தவாசி தாலுக்கா அமனம்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். 25.10.2025ம் தேதி காலை 7.00 மணி அளவில் எனது வீட்டின் அருகில் உள்ள குழாயில் தண்ணீர் பிடித்துவிட்டு குழாயை மூடிவிட்டேன். ஆனால் குழாய் கழண்டு கொண்டு தண்ணீர் தெருவில் போனது. எதிர் வீட்டில் இருந்த ஏகாம்பரம், அவரது மகன் கண்ணப்பசாமி, அவரது மனைவி துளசி என்பவர் மூவரும் வந்து என் வீட்டிற்கு வந்து தெவடியா என்று அசிங்கமாக திட்டி கண்ணப்பசாமி என்பவர் என்னை கண்ணத்திலும், இடது கை மற்றும் இடது கால் முட்டியிலும் அடித்தார். நான் ஏன் என்னை அடிக்கின்றீர்கள் என்று கத்தினேன். சத்தம் கேட்டு என் மகன் விஜயகுமார் வந்து ஏன் என் அம்மாவை அடிக்கின்றீர்கள் என்று கேட்டான். அதற்கு கண்ணப்பசாமி எனது மகனின் இடது கண்ணில் கட்டையாள் குத்திவிட்டான் அதனால் அவனுக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் நானும் எனது மகனும் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். அங்கு முதல் உதவி சிகிச்சை செய்யப்பட்டு எங்களை மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை முடித்துவந்து கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என் மகனுக்கு கண்ணில் வலி அதிகமாக இருந்ததால் மீண்டும் வந்தவாசி அரசு மருத்துவனையில் சேர்த்து 3 நாட்கள் சிகிச்சை எடுத்தார். போலிசார் நான் கொடுத்த புகாருக்கு கூப்பிட்டு மனு ரசீது கொடுத்தார்கள். ஆனால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்னர் திருவண்ணாமலை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு தபால்மூலம் புகார் அனுப்பினேன் அவரும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எதிரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

// உண்மை நகல்//

Taken down by me in Open Court, Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.